உண்மைச் சொத்து வணிகர்களுக்கான அறிவித்தல்

எச்சரிக்கையாக இருங்கள்!

உண்மைச் சொத்து ஆதனங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படலாம்

STF probes Panadura house rented by bombers

KAMILA SOMARATNE

Panadura Group Corr

A police STF team with the Panadura North Police, on Sunday night, searched the house in Panadura which suicide bombers had allegedly rented for the last two months, paying a rent of Rs 45,000 per month.

Police officials cleared an area in the Sarthakiriella area in Panadura to carry out the search operation.

Police believe that the bombs had been manufactured in this house.

Meanwhile, a senior police officer of the Panadura Division revealed that two years ago, the Panadura North Police arrested a Muslim youth who lived in the Sarthakiriella area in connection with a bra...

පිපිරවීමේ දළ සැලැස්ම ඇතුළත් සටහනක් පානදුර නිවෙසින් හමුවෙයි

බෝම්බ හදන බඩු ගේ පුරා තිබිණි

இலங்கை குண்டுவெடிப்பு சந்தேக நபர்கள் வாடகைக்கு இருந்த வீடு சுற்றி வளைப்பு

ஆளொருவருடன்/ஆட்கள் குழுவுடன்/ நிறுவனமொன்றுடனான உண்மைச் சொத்துக் கொடுக்கல்வாங்கலொன்று ஏதேனும் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கையினை (பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் உள்ளடங்கலாக) செய்வதுடன் தொடர்புடையதாக இருக்கக்கூடியதென சந்தேகிப்பதற்கு எவையேனும் நியாயமான காரணங்கள் உங்களிடம் இருக்குமாயின், அதனை உடனடியாக நிதியியல் உளவறிதல் பிரிவிற்குத் தெரிவிப்பது உங்களது கடமையாகும்.

உண்மைச் சொத்துக் ஆதனங்கள் தொடர்பில் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற போது பின்வரும் முக்கிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துங்கள்

- உண்மைச் சொத்து ஆதன விற்பனையில்/கொள்வனவில் ஈடுபடும் உங்கள் வாடிக்கையாளரைப் பற்றித் தெரிந்துகொள்ளல்.
- ஆளின்/ஆட்கள் குழுவின் அல்லது நிறுவனத்தின் விவரங்களை சேகரித்து சட்ட ரீதியாக செல்லுபடியான ஆவணமொன்றினைப் பயன்படுத்தி அடையாளத்தை உறுதிப்படுத்தல்.
- உண்மைச் சொத்து ஆதனத்தை விற்பனை செய்வதற்கான/கொள்வனவு செய்வதற்கான காரணத்தைப் பெற்றுக்கொள்ளல்.
- உண்மைச் சொத்து ஆதனத்தைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற நிதியங்களின் மூலங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- கொள்வனவு செய்பவர் சந்தை விலையினை விட உயர்வான பெறுமதியினை வழங்குவாராயின் எச்சரிக்கையாக இருங்கள்.
- கொள்வனவானது வாடிக்கையாளரின் அறிந்த தகுதியுடன் அல்லது உண்மைச் சொத்து ஆதனத்தைக் கொள்வனவு செய்வதற்கான அவரது பொருளாதார இயலளவுடன் பொருந்துகின்றதா என்பதனை அடையாளப்படுத்திக்கொள்ளுங்கள்.
- தொடர்புடைய ஆள்/ஆட்கள் குழு/நிறுவனம் தேவையான தகவல்களை வழங்குவதற்கு மறுப்பதாயின் அதுபற்றி நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு நீங்கள் அறிக்கையிட வேண்டும்.

முகவரி:

பணிப்பாளர்,
நிதியியல் உளவறிதல் பிரிவு,
இலங்கை மத்திய வங்கி,
இல. 30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01.

தொ.பே. இல.: +94 11 2477125 /509
தொலைநகல்: +94 11 2477692
மின்னஞ்சல்: fiu@cbsl.lk
வெப்தளம்: www.fiusrilanka.gov.lk

சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவதற்கான அட்டவணை V பதிவிறக்கம் செய்க.

http://www.fiusrilanka.gov.lk/docs/Regulations/2015-56/2015-56(E).pdf

- மேற்குறித்த கடப்பாடுகள், 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் சட்ட ரீதியான ஏற்பாடுகளின் கீழ் உங்களது கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது.
- சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை தெரியப்படுத்துகின்ற ஆட்களைப் பாதுகாத்தல் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 12ஆம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT